அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

எல்லாம் செயல் கூடும்

# தீபநெறி

தீபம் 7 நெறி 10 தமிழ் மாத இதழ் விலை ₹1 மே 2017

## பட்டினியில்லா... நோயில்லா... குற்றமில்லா...
## வளமிக்க வையகத்தை வார்த்தெடுப்போம்!



கலையுரைத்த கற்பனையே நிலைஎனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடி போக...


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க !!!

# தருமத்திற்கு தலை வணங்குகின்றோம்...



தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிக்கு ரூ. 50,000/- பொற்காசுகளை அள்ளித்தந்த வள்ளல்,
தர்மத்தாயின் தவப்புதல்வராகிய செய்யார் சேவகன் தயவு. தீபம் பாரதி குடும்பத்தினரை தீபம் வாயார வாழ்த்துகிறது.

## " தீபநெறி " ஆசிரியர் குழு




**கே.என். உமாபதி**
ஆசிரியர் - தீபநெறி இதழ்
கே.கே. நகர்
கைபேசி : 95518 49757



அன்பின் பிடியுள்
**அர. இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
தொலைபேசி :04172 273293
கைபேசி : 80564 38488



இலக்கியச்செல்வர்
**இளந்தேவன்**
அய்யப்பந்தாங்கல்
கைபேசி : 99400 92876



வள்ளலார் சிற்றடியேன்
**குருபக்கிரிசாமி**
ஆசிரியர் - அருட்சுடர்
வடலூர்
94428 12844



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி இதழ்
கைபேசி : 94440 73635

## கருணையிலா ஆட்சி

'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக அருள் நயந்த சன்மார்க்கர் ஆள்க...” என்பதாக “சமரச நிலை” என்ற தலைப்பில் ஐந்தாவது பாடலில் முதல் இரண்டு வரிகளை வள்ளலார் எழுதுகிறார். இந்த ஆட்சி என்ற வார்த்தையைப் பார்த்ததும் நாம் என்ன நினைக்கிறோம்? அரசர், அமைச்சர், அரசாங்கம் என்பதாகவும் தற்போதுள்ள ஜனநாயக நாட்டில் எவரும் பதவிக்கு வரலாமல்லவா? நான் கூட பல ஆண்டுகளாய் சன்மார்க்த்தில் இணைந்திருக்கிறேனே. நானும் ஆட்சி செய்யும் வாய்ப்பைப் பெற முனைந்தாலென்ன - அருள் நயந்த சன்மார்க்கர் ஆள்வது பொருத்தமேயல்லவா என்பதும் நியாயமாகத் தோன்றலாம். ஆனால்...

மீன்துறை, கால்நடைத்துறை, ஆடுவளர்ப்பு, கோழிப்பண்ணை, SLAUGHTER HOUSE, பட்டுப்புழு வாரியம் போன்ற துறைகள் அரசாங்கத்திடம் உள்ளது. பல்லாயிரக்கணக்கானோர் பணிபுரிகின்றனர். ஆனால் சன்மார்க்கத்தில் இருப்பவர்கள் இதற்கும் பொறுப்பேற்றால் மட்டுமே ஆட்சி செய்ய முடியும். இது ஏற்புடையதா? அப்படி ஏற்கும் பக்குவத்தில், பரவாயில்லை என்று துணிந்தாலும், ஆடு, மாடு, பன்றி, குக்குடங்கள் நம்மைப் பார்த்து - நமது ஆட்சியைப் பார்த்து மேற்சொன்ன கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக என்ற வரிகளை நம்மிடமே சொல்லும் அல்லவா? அதற்கு என்ன பதில்? தற்போதுள்ள உலக வாழ்க்கையில் சன்மார்க்கத்தைப் புரிந்து கொண்டவர்களால் ஒருநாடு அல்ல - ஒரு தெருவைக்கூட ஆட்சி செய்யும் சூழ்நிலை இல்லை, இது உண்மை!

என்னய்யா இப்படிச் சொல்கிறீர்கள்? நான் அக்ரஹாரத் தெருவில் வசிக்கிறேன், ஆசார அனுஷ்டானங்களுடன் கோயில் அர்ச்சகர்கள் வாழும் தெரு, அங்கே (அந்த தெருவுக்கு) நான் ஆட்சிப் பொறுப்பேற்க எப்படி தடையிருக்க முடியும்? என்று கேட்டால் அய்யா அந்த தெருவில் அத்தனை பேரம் பட்டு வேட்டி, அங்கவஸ்திரம், புடவைகள், பாவாடைகள் பயன்படுத்துவது உண்மைதானே, அந்த பட்டுத் துணி என்பது பல்லாயிரம் பட்டுப் புழுக்களை கொதி நீரில் போட்டு துகில் உரிந்து தயாரானது என்பது உண்மையென்பதால் “சன்மார்க்கம் பட்டுப் போன துணி” எனப்படுகிறது, பிறகு எந்த விதத்தில் அருள்நயந்த சன்மார்க்கியாய் நாம் ஆவது? ஆள்வது?

அய்யா நான் ஜைன மதம் சார்ந்தவர்களே வாழும் தெருவில் வாழ்கிறேன் - நான் அந்தத் தெருவையாவது ஆள நினைக்கலாமா? ஜைனர்களின் உயிர் இரக்க பண்பாட்டிற்குத் தலைவணங்குகிறோம், ஆனால் அவர்களில் முதல் தொழிலே பணம் கொடுத்து அதற்கு வட்டி வாங்குவது தானே? வட்டி வாங்குவது சன்மார்க்கத்திற்கு ஏற்புடையதல்ல என்ற ஒரே வித்தியாசத்தில் தான் நாம் அவர்களிலிருந்து வேறுபடுகிறோம். எனவே அருள் நயந்த சன்மார்க்கியாய் எந்தவிதத்தில் ஆவது? ஆள்வது?

காலம் கனியும் வரை காத்திருந்து இந்தக் கோணத்தில் எதிர்கால சந்ததியர் ஆட்சி செய்ய முனையட்டும், ஆனால் மேற்சொன்ன இரண்டு வரிகள் எதன் பொருட்டு எழுதப்பட்டிருக்கலாம் என்றால்...

ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும், குறிப்பாக மனிதனின் சிரநடு சிற்றம்பலத்தில் – மாமணி மன்றிலே ஞான சுந்தர வடிவ ஜோதியாய் விளங்கும் சுத்த சன்மார்க்க சற்குரு – விரைந்தீது தருணம் வந்தருள் புரிய வேண்டும், ஆனால் அந்த இறைவன் வெளிப்படாமல் இருப்பதன் காரணம், அந்த உடலுக்கு சொந்தக்காரன் கருணையே இல்லாமல் காட்டாட்சி நடத்துகிறான். கொலை, புலை, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் போன்ற எண்ணிலடங்கா கொடுஞ் செயல் புரிந்து தன் உள்ளே உள்ள ஆன்மாவை நடுங்கச் செய்து, அதில் மகிழ்ந்து, ஆனந்தமாய் ஆட்சி செய்கிறான். இப்படிப்பட்ட கருணையிலா ஆட்சியை, தன் உள்ளே உள்ள, தன்னை கடைத்தேற்ற முயலும், ஆன்மாவிடமே நேயமில்லாமல் ஆட்சி நடத்துபவனின் எண்ணம் என்பது கடுகி ஒழிந்து, அவன் திருந்தி, சமரச நிலை கூறும் சன்மார்க்கத்தில் இணைந்து, அருள் நயந்து அவன் உடலையும் ஆன்மாவையும் ஆட்சி செய்யட்டும். எல்லாவுயிர்களும் இன்புற்று வாழவும், எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி ஒத்த உரிமையுடன் சமரச நிலை எனும் "ஆன்மநேயம்" வரப் பெறின் "ஆன்மலாபம்" பெற தடையேதுமில்லை!

இப்படிப்பட்ட ஆட்சியை அமைத்தால் அதுவே இறைவனுக்குச் செய்யும் கைம்மாறு, கைம்மாறு என்பது "பிரதி உபகாரம்." ஆண்டவனுக்கு பிரதியுபகாரம் செய்ய முடியாது. எனவே அவன் படைத்த உயிர்கட்கு "பரோபகாரம்" செய்யுங்கள். அதில் கிடைக்கும் அனுபவத்தால் நீங்கள் முதலில் விரட்டப் போவது கருணையிலா ஆட்சியைத்தான்!

**கே.என். உமாபதி**
கைபேசி : 95518 49757

---

# தீபநெறி

தீபநெறி இதழ் குறித்த தங்களின் கருத்துக்களை, மேலான ஆலோசனைகளை, கட்டுரை ஆசிரியர்களுக்கு கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்கலாம்.

## விளம்பரங்களில்லா, விலையில்லா மாத இதழ்

## தீபநெறி மாதஇதழ்

தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற

முகவரி மாற்றம் தெரிவிக்க **9444073635** என்ற எண்ணுக்கு

**முகவரியை** SMS / Whatsapp செய்யவும்.

# நீர் மோர்ப் பந்தல்...




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில், தண்டீஸ்வரம் கோவில் வளாகம் அருகில் தினந்தோறும் கோடையில் தாகம் தணிக்க நீர் மோர்ப் பந்தல்.




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்
தினந்தோறும் கோடையில் தாகம் தணிக்க நீர்மோர் வழங்கும் சேவதாரிகள்.

மண்உருச் சத்திகள் மண்கலைச் சத்திகள்
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (386)

## தீபம் அறக்கட்டளையின் அன்ன தருமச்சாலைகள்




1. **வேளச்சேரி நித்ய தீபத் தருமச்சாலை.**
2. **வேளச்சேரி நடமாடும் தருமச்சாலை.**
3. **சென்னை கல்குட்டை தருமச்சாலை.**
4. **சென்னை கந்தன் சாவடி தருமச்சாலை.**
5. **திண்டிவனம் கொஞ்சிமங்களம் தருமச்சாலை.**
6. **திண்டிவனம் கேணிப்பட்டு தருமச்சாலை.**
7. **காஞ்சிபுரம் செய்யார் இருங்கூர் தருமச்சாலை.**
8. **செஞ்சி தேவதானம்பேட்டை தருமச்சாலை.**
9. **செஞ்சி கொங்காவரம் தருமச்சாலை.**
10. **மாங்குடி (திருவாரூர் மாவட்டம்) தருமச்சாலை.**
11. **திருவீழிமிழலை (திருவாரூர் மாவட்டம்) தருமச்சாலை.**
12. **சிவானகரம் (திருவாரூர் மாவட்டம்) தருமச்சாலை.**
13. **கோவிந்தகுடி தருமச்சாலை.**
14. **சக்ராபடித்துறை (கும்பகோணம்) தருமச்சாலை.**
15. **சுவாமிமலை தருமச்சாலை.**
16. **பெரியகுறிச்சி (நெய்வேலி) தருமச்சாலை.**

மேலும் விரைவில் ஈரோடு, பாண்டமங்களம், இராமநாதபுரம் முதுகுளத்தூர், கொல்லிமலை உள்பட ஐந்து தர்மச்சாலைகள் தொடங்க தீபம் அறக்கட்டளை திருவுள்ளம் கொண்டுள்ளது என்பதை தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

16 தருமச்சாலைகளுக்குத் தேவையான அரிசி, பருப்பு, மிளகு, சீரகம் போன்ற பொருள்களை தயா உள்ளம் கொண்ட தாங்கள் அருளாக மாற்றி வாரி வழங்கும்படி தங்களை அன்புடன் வேண்டி விண்ணப்பிக்கிறோம்.

**தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!**

**மண்ஒளிச் சத்திகள் மண்கருச் சத்திகள்**
**அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (388)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் வேளச்சேரியில் புகழ்பெற்ற திரௌபதி அம்மன் கோவில் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கானோருக்கு பசியாற்றுவிக்கும் அற்புத காட்சி.











மண்கணச் சத்திகள் வகைபல பலவும்
அண்கொள அமைத்த அருட்பெருஞ்ஜோதி (390)

# அருட்பெருஞ்சோதி அகவல்

## அனுபவப் பொருள் விளக்கம்

## திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

### 14. தனிவெளி - சிவவெளி - அருள்வெளி

27. திருநிலைத் தனிவெளி சிவவெளி யெனுமோர்
28. அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ்ஜோதி

(உ-வி.) இதற்கு முன் குறிக்கப்பட்ட பன்னிரெண்டு இணை அடிகள் அகரம் முதல் ஒளகாரம் முடியவுள்ள பன்னிரண்டு உயிரெழுத்துக்களை முதலாகக் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளன, இவ்வமைப்பு உயிர்வர்க்க முறை எனப்படும், அடுத்து பதின்மூன்றாம் நிலையைச் சுட்ட, திருநிலைத்தனிவெளி என்ற சொற்றொடர் இங்கு அமைக்கப்பட்டுள்ளதாம். இவ்வமைப்பு அருள் அனுபவத்தின் பொருட்டாம்.

நம் தமிழ் நெடுங்கணக்கில் பன்னீருயிருக்கு அடுத்துவருவது, ஃ - என்னும் ஆய்த எழுத்தாகும். இது, தனிநிலை என்றும், முப்பா;ற புள்ளி என்றும் கூறப்படும், உயிர் நிலைக்குப் பின்னும், மெய்ந்நிலைக்கு முன்னும் வைக்கப்பட்டுள்ளது இந்த ஆய்தம், தமிழ்ச் சொற்களில் இந்த ஆய்தமும், மெய்யாம் புள்ளி எழுத்துக்களும் மற்றுஞ் சில உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரமாட்டா, ஆகவே இங்கு இந்தப் பதின்மூன்றாவது இணையடியை ஒரு வேறுபாட்டுத் தோற்றத்தோடு அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். அதாவது, தனிநிலை என்ற ஆய்தத்தைக் குறிக்கும் சொல்லை முதலாகக் கொண்டதோடு திரு என்னும் தெய்வப் பண்பு உணர்த்தும் அடை மொழியுஞ் சேர்த்து ஓதப் பெற்றுள்ளதாம். திருநிலைத் தனி என்றதைத் தனிநிலைத் திரு எனக் கொண்டு பொருள் காண வேண்டும். மேலும் இது பன்னிரண்டாம் உயிர்நிலைக்கு மேல் பதின்மூன்றாவதாகக் கொள்ளப்படுவதின் காரணம் அனுபவக் குறிப்பேயாகும். உயிரனுபவ முற்றிடில் அதனிடத்தே ஓங்கு அருளனுபவமுறும், என்பது வள்ளல் வாசகம்.

அன்றியும் இவ்வனுபவ நிலைகளைக் குறித்து நம் அடிகளார் விளக்கியுள்ளது இதுவாகும். அனுபவத்திற் பெறப்படும் நிலைகளாவன :

| | | |
|---|---|---|
| 1. பூத நிலை | 2. கரண நிலை | 3. பிரகிருதி நிலை |
| 4. மோகினி நிலை | 5. அசுத்த மாயா நிலை | 6. அசுத்தமகா மாயா நிலை |
| 7. சுத்த மாயா நிலை | 8. சுத்த மகா மாயா நிலை | 9. சர்வ மகாமாயா நிலை |
| 10. குண்டலி நிலை | 11. பிரணவ நிலை | 12. பரிக்கிரக நிலை |

இப்பன்னிரு நிலைக்கப்பால் அனுபவப்படுவது பதின்மூன்றாவதாகிய அருள்நிலையாம், இந்த அருள் அனுபவ நிலையில்தான் கடவுள் உண்மை கண்டு அடைதல் கூடும், அக்கடவுள் அனுபவமே சுத்த சிவானுபவமாகக் குறிக்கப்படுகின்றது.

நிறை மனிதனின் அருள் அனுபவத்தில் விளங்கும் கடவுள் அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங்கருணையாக உள்ளது. இவ்வருள் விளக்கத் தொடர் வாசகத்தும் (அ. ருட். பெ. ருஞ். ஜோ. தி. த. னிப். பெ. ருங். க. ரு. ணை) பதின்மூன்று நேரசைகள் அமைந்தே விளங்குகின்றதாம். இவ்வனுபவம் வெளிப்படுவது நம் சிரநடுச் சிற்றம்பலத்தின் கண்ணேயாம். இவ்விடம் பகர வடிவக் குழியிடமாகவும், மேல் லகர மெய்யாம் - இல் - என்னும் பதின்மன்றாவது மெய்ந்நிலை எழுத்தால் குறிக்கப்படுவதாம். ஆகவே இந்தப் பல் நிலையே அருட்பெருங்கடவுளர் தனிப்பெருங் கருணையுடன் திகழும் உண்மையைச் சுட்ட வந்துள்ள தாம். இப்படி வெளிப்பட்டிலங்கும் இக்கடவுள் உண்மை, இந்த ஆன்ம அணுவுக்கு அகத்தும் புறத்தும் அருட்பெருஞ் ஜோதியாகவே நிலவுகின்றதாம். இவ்வுண்மையைக் குறிக்க (அம்+பல்+அம்) அம்பலம் என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது. முதலிலுள்ள

அம், ஆன்ம அணுவின் அகத்தே அருவ அருள் உணர்வாய் உள்ளது; ஈற்றிலுள்ள அம் ஆன்மாவின் புறம் சூழ்ந்த ஜோதியுருவாயுள்ளதாம். இவ்விரு நிலைக்கும் நடுவிலே தான் நம்பதி திரயோதசாந்த அருள் அனுபவத்தில் அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங்கருணை யாய் வெளிப்பட்டு, நம்மைப் பேரின்பில் விளங்கச் செய்யப் பேரானந்த நடனம் புரிந்து கொண்டுள்ளார். இந்த அருட்பெருநிலையே, தனி நிலை என்னும் ஆய்த எழுத்தியலால் வெளியாக்கப்பட்டுள்ளதாம்.

இங்கு குறிக்கப்பட்டுள்ள மூன்று வெளிகளின் உண்மை, ஆய்த எழுத்திற் காணும் கீழுள்ள இருவட்டங்கள் கடவுளர் ஈரடிகளையும் மேலுள்ள வட்டம் முடிநிலையனுபவத்தையும் சுட்டுகின்றனவாம். வெளி என்பது வெற்றிடநிலையாம். புறத்துள்ள அகண்ட வெளி வட்ட வடிவமாக இருக்கின்றதைக் கொண்ட அதனைச் சுட்டுவதற்கு வட்டக் குறியீடு அமைத்தனர். இந்த புறவெளியின் உண்மை அனுபவமெல்லாம் ஆன்ம சிற்றணுவில் வெளியாகின்றதால், அவ்வணுவுக்கும் அதனுள் மறைந்து நின்று ஆட்சி புரிகின்ற அருவ அருட்சக்திக்கும் கூட வட்டக்குறி அடையாளமே கொள்ளப்பட்டுள்ளதாம். புறத்தே ஜோதிமயமாயுள்ளது சிவவெளி எனவும், அகத்தே அருள் சக்திமயமாயுள்ளது அருள்வெளி எனவும், இவ்விரண்டின் மேற்பக்குவ காலத்தே அனுபவப்படும் நித்தியானந்தப் பெருநிலையை தனிவெளி எனவும் உணர்த்தப்படுகின்றோம். இத்தனிநிலை வெளியில் நித்திய வாழ்வு பெற்றுத் திகழ்வதே சுத்த சன்மார்க்கத் திரிதேக சித்திப் பெருநிலையாம். இதுதான் உண்மையான திருவாழ்வாகும். இந்தத் தனிநிலையுற்றிருந்து கொண்டே நம் வள்ளற்பெருமான், அகச் சிற்சபையும் புறப்பொற்சபையும் உரிமையிற் பெற்றுத்தான், சிற்சபையும் பொற்சபையும் சொந்தமென தாச்சு என்கின்றார். இப்பொற்சபையே சுத்த தேகமாகவும், சிற்சபையே ஞானதேகமாகவும் கொண்டாடுகின்றார் திருவருட் பிரகாசமாம் அருட்பெருவடிவில் விளங்குகின்ற நம் வள்ளலார்:

ஆடும் கருணைத் திருநடத்தீர்
    ஆடும் இடந்தான் யாதென்றேன்
பாடும் திருவும் சௌந்தரமும்
    பலமும் காட்டும் இடமென்றார்
நாடும் படிதன் கருளுமென்றேன்
    நங்காய் முன்பின் ஒன்றேயாய்
ஈடுந் தியபல் நடுவுளதாம்
    என்றார் தோழி இவர்வாழி

என்ற அருட்பாசுரத்தால் அருட்பெருஞ்ஜோதி நடனபதியின் அம்பல உண்மையும், அந்தப் பல்நிலைப்பதியின் திருவருளின் சேர்ப்பால், திருவும்-பொன்வடிவச் சுத்த தேகமும், சௌந்தரம் = அழகு = அம்= அ+(உ)+ம்=ஓம் என்னும் பிரணவ தேகமும், பலம் = பழம் ஆகிய ஞான தேகமும் பெறப்படும் இடமே கடவுள் ஆடும் அம்பலம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

ஆய்தம் குறிக்கும் முப்பாற் புள்ளியின் உண்மை, பதுமாசனத்திருக்கும் யோகியின் வடிவில், இருகாற் பெருவிரலின்கண் உதித்தொளிர் இடபிங்கலா நிலைச் சூரிய சந்திர வட்டங்களையும் மேற்சிரத்தொளிர் சுழிமுனை ஜோதி வட்டத்தையும் குறிக்கும், மேலும் இவ்விருகலா நாடியின் முடிநிலை தீண்டி நிற்கும் இருகண்வட்ட நிலையையும், அவற்றின் நடுவுற்று அக்கினிகலா ஞானக்கண்ணாய் அதுவும் ஒரு வட்டமாய்த திகழும் நிலையையும் உணர்த்துகின்றனவாம். மேல் உள்ள தனி வெளி சுட்டும் நுதற்கண்ணே மெய்யனுபவத்திற்கு உதவி நிற்கின்றதேபோல், முக்கண் என்று குறிக்கப்படும் தேங்காயின் அந்த மேனிலைக் கண்ணே அதற்கு விளைவுபெறக் காரணமாய் உள்ளதை அறிவோம்.

எனவே, நாம் நமது உண்மை நிலையாகிய திருவளர் தனிவெளிநிலையுற்று, அருள்வெளி சிவவெளி அனுபவமுண்டாக அருட் பெருஞ்ஜோதியைப் போற்றி செய்வோம்.

# மாமாங்கம் புகழ்பாடும் கும்பகோணத்தில் தீபம் அறக்கட்டளையின் புதிய தருமச்சாலைகள்...



மாங்குடி தருமச்சாலை
பேரளம் திருவாரூர் மாவட்டம்.



திருவீழிமிழலை தருமச்சாலை
திருவாரூர் மாவட்டம்.



சிவானகரம் தருமச்சாலை
திருவாரூர் மாவட்டம்.



கோவிந்தகுடி தருமச்சாலை
கும்பகோணம்.



சக்கராபடித்துறை தருமச்சாலை
கும்பகோணம்.



சுவாமிமலை தருமச்சாலை
கும்பகோணம்.

**மண்ணினில் பொருள்பல வகைவிரி வெவ்வேறு**
**அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி (396)**

# மாமாங்கம் புகழ்பாடும் கும்பகோணத்தில் தீபம் அறக்கட்டளையின் புதிய தருமச்சாலைகள்...







கும்பகோணம் 6 தருமச்சாலைகள் துவக்க விழாவில் கலந்து கொண்ட ஆன்மநேய உள்ளங்களின் பல்வேறு காட்சிகள்.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பாக கும்பகோணம் தருமச்சாலைகளுக்கு அனுப்புவதற்கு புதிய பாத்திரங்கள் மற்றும் அடுப்புகள்.

## வடலூர் சத்திய தருமச்சாலையில் மாத பூச நன்நாளில் 41-வது மாதமாக சேவைப்பணியில் தீபம் அறக்கட்டளையின் ஆடுகின்ற சேவடிகள்











மண்ணிடைப் பக்குவம் வகுத்து அதில்பயன்பல
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி (400)

# மனிதநேயமும் கடந்த ஆன்மநேயம்...



சென்னை அயனாவரத்தைச் சேர்ந்த பார்வையற்ற செல்வம் என்பவருக்கு
கடந்த 6 ஆண்டுகளாக தொடர்ந்து மாதந்தோறும் அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள்
தீபம் அறக்கட்டளையின் சார்பில் வழங்கப்பட்ட காட்சி.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பாக ஆதரவற்ற முதியவர்களுக்கு
படுப்பதற்கு வசதியாக மெத்தை மற்றும் தலையணை வழங்கப்பட்ட காட்சி.

# ஆன்மநேய அறப்பணியில் உங்கள் வேளச்சேரி தீபம்...




சென்னை, பம்மல் அனகாப்புத்தூரைச் சேர்ந்த சேகர் என்பவருக்கு டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சைக்காக கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து மாதந்தோறும் ரூ. 5000/- தீபம் அறக்கட்டளையின் சார்பில் வழங்கப்பட்ட காட்சி.



சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பாக 10 - வது தருமச்சாலையாக நெய்வேலி பெரியகுறிச்சியில் தொடங்கப்பட்ட காட்சி (நாள் - 02.05.2017).

## காட்சியும் காணாக் காட்சியும்...





சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் நித்ய தீப தருமச்சாலையில்
தினந்தோறும் பல நூற்றுக்கணக்கான அன்பர்கள் பசியாறும் அற்புதக் காட்சி.

நீரினில் பசுமையை நிறத்தி அதில்பல
ஆருற வகுத்த அருட்பெருஞ்ஜோதி (406)

## அருளாளர்களின் அமுத மொழிகள்

ஒரு தொகுப்பு :

1. தியானம் : தியானம் என்பது மோனம்.

தியானம் என்பது மூளை, தனது எல்லாவித செயல்பாடுகளிலும், முழுமையாக அமைதியாக இருக்க முடியுமா? என்பதை அறிவதே.

தியானம் இன்பத்தையோ, மகிழ்ச்சியையோ தேடுதல் அன்று.

தியானம் அன்பின் இயக்கம்.

எண்ணத்தின் முடிவே தியானம்.

2. ஜென் :

நோக்கமற்ற இலக்கற்ற முயற்சி. அதுதான் தியானம். முழு அமைதி - நிச்சலனம் - நிர்விகல்பம். ஓர் இலக்கில்லை. ஒரு தேவை இல்லை. ஒரு பற்று இல்லை. ஒரு எதிர்பார்ப்பும் இல்லை.

3. "கடவுள் ஒரு ஆள் அல்ல. ஒரு உருவமல்ல. ஒரு வடிவமல்ல. உனது உள்ளத்தின் அனுபவம்." ஓஷோ.

4. "வாழ்வைச் சரியாக வாழ்ந்தவனுக்கு, மரணம் நன்கொடையாகக் கிடைக்கிறது. ஏனெனில் மரணத்திற்கு பின்னும் அவன் கூடுதல் சிறப்புடன் நெடுங்காலம் நினைவில் நிலைக்கிறான்.'

5. கன்பூசியஸ் - சீன தத்துவ ஞானி - சாக்ரடீஸுக்கு முந்தைய நூற்றாண்டில் வாழ்ந்தவர். (கி.மு. 500-600)

"பிறப்பதற்கு முன் மனிதன் நிலை - இறந்தபின் அவன் என்ன நிலை எய்துவான் என்பது பற்றி கவலைப்படாமல் வாழ்கின்ற வரையில் ஒழுக்கமுள்ளவனாக - நன்னடத்தை உடையவனாக வாழ வேண்டும்" இவைதான் கன்பூசியஸின் முக்கியமான போதனை.

அவருடைய பெரிய கவலை : - "நல்லதையே எண்ணுகிறேன். நல்லவற்றை மட்டுமே போதிக்கிறேன். நல்வழிகளை மட்டுமே நாடுகிறேன். பிறருக்கு ஒரு துன்பமும் இழைக்க நினைக்கக்கூட விரும்பாத என்னை இவர்கள் ஏன் தூற்ற வேண்டும்? நல்லவற்றை நல்லுரைகள் என்று நம்ப மறுக்கும் - ஏற்க மறுக்கும் இவர்களை எனக்குப் புரியவில்லையே.'

இன்றும் நிலைமை இதைவிட மோசமாக இருப்பதுதான் விந்தையிலும் விந்தை.

அன்பு நெறியே அவர் அமைக்க விரும்பிய வாழ்க்கைத்தளம். தூய்மையான மனித வாழ்க்கையே அவர் காணவிரும்பிய கடவுள்.

6. லாவோத்ஸ் : "என்னைத் தவிர மற்ற எல்லோரும் புத்திசாலிகளாகத் தெரிகிறது. என்னைத் தவிர எல்லோரும் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்களே - நான் தான் முட்டாள்.

விழிப்புணர்வு பற்றி லாவோட்சு :

ஒளியைப் போன்றது விழிப்புணர்வு. ஒளி இருக்குமிடத்தில் இருட்டு இரு;ககுமா? ஒளிமிக்க விழிப்புணர்வோடு நீங்கள் இருந்தால் கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதில்லை. கோபம் எழாது. பொறாமை எழாது. ஆணவம் காணாமல் போய்விடும்.'

7. லின் – சீ : ஓர் சீன ஞானி. காலை சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் எழுந்து "எனக்கு ஒரே ஒரு கேள்விக்கு நீங்கள் பதில் அளித்தால் போதும். நான் யார்?" என்று கேட்டார்.

லின் சீ தனது இருக்கையை விட்டு எழுந்தார். கேள்வி கேட்ட நபரை நோக்கி நடந்தார். கேட்டவரின் முன்பு நின்றார். அவருடைய கண்களை உற்றுப்பார்த்துக் கொண்டு நின்றார். சில கணங்கள்தான். கேள்வி கேட்டவருக்கு வியர்த்துக் கொட்டியது.

லின் சீ சொன்னார் : – "என்னிடம் கேட்காதே. உனக்குள் சென்று இந்தக் கேள்வியைக் கேட்பவன் யார் என்று கண்டுபிடி. உனது கண்களை மூடிக் கொள். உனக்குள் ஆழ்ந்து செல். உள்ளே இருந்து இந்தக் கேள்வியைக் கேட்பவர் யார் என்று கண்டுபிடி. உன்னால் மட்டும்தான் முடியும்" தனது இருக்கைக்குத் திரும்பினார். சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

8. சாக்ரடீஸ் : – கிரேக்க ஞானி. ஏதென்ஸ் நகரிலிருந்த அப்போதைய கோவில் ஒன்றில் அசரீரி கேட்டதாம்.

"உலகிலேயே உயர்ந்த ஞானி நமது நாட்டின் சாக்ரடீஸ்." இதனை செவிமடுத்தோர், திரண்டு சென்று சாக்ரடீஸிடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தனர்.

அமைதியாக அனைவரையும் கையமர்த்தி, "உங்கள் ஆரவாரம் தேவையற்றது. என்னைப்பற்றி "எனக்கல்லவா தெரியும். எனக்கு ஒன்றுமே தெரியாது" என்பது மட்டும் எனக்கு நன்கு தெரியும்." நான் எப்படி ஞானியாக முடியும்? மீண்டும் அந்தக் கூட்டம் கோவிலுக்குள் சென்று சாக்ரடீஸின் வார்த்தைகளை பதிவு செய்தனர்.

அசரீரி ஒலித்ததாம் : ஒன்றுமே தெரியாது என்ற பேருண்மையை புரிந்து வைத்துள்ளதனால் தான் அவர் உலகிலேயே சிறந்த ஞானி.

ஏன்? எதற்கு?? எப்படி??? சாக்ரடீஸின் சூத்திரம்.

"நான் சாவதற்கு அஞ்சவில்லை. அநீதிக்கு அஞ்சுகிறேன்." – சாக்ரடீஸ்.

9. சாகாமல் இருப்பது எப்படி?

"மடிந்தாலும் பொய் கூறேன் மானிடற்கே
நலிவுமில்லை. சாவுமில்லை – கேளீர். கேளீர்!
நாணத்தைக் கவலையினைச்சினத்தை. பொய்யை
அச்சத்தை, வேட்கைதனை அழித்துவிட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தைப் பின்சொல்வேன் சினத்தைமுன்னே

வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை."
- வள்ளலார்.

10. ஒன்றாகக் காண்பதே காட்சி புலன்ஐந்தும்
வென்றான்தன் வீரமே வீரமாம் - என்றாலும்
சாவாமல் கற்பதே கல்வி, தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.
- ஔவையார்.

11, "புதுமையாகப் பரிணமிக்காத பழைமையாக இருப்பின்
அந்தப்பழைமை ஒன்றுக்கும் ஆகாது.

12. ஒரே ஒரு பழைமையை - பழைய வழக்கத்தை - பழைய சடங்கினை சீர்தூக்கி செம்மைப்படுத்தி புதியதாக பரிணமிக்க ஒரு முயற்சியாவது நாம் இதுவரை செய்ததுண்டா??

**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை /8056438488

## அன்பான வேண்டுகோள்

ஆன்மநேய ஒருமைப்பாட்டுள்ளம் கொண்ட அன்பு சகோதர, சகோதரிகளுக்கு சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் இனிய வந்தனங்கள் பல. நமது தீபம் அறக்கட்டளையின் சார்பில் தயாள உள்ளம் கொண்ட தங்களின் பேராதரவினால் கும்பகோணம், கொஞ்சிமங்களம், இருங்கூர், சோழிங்கநல்லூர், ஈரோடு உள்பட 17 தருமச்சாலைகள் இயங்கி வருகிறது.

தீபம் அறக்கட்டளையின் சார்பில் இயங்கி வரும் தருமச்சாலைகள் மூலம் தினசரி காலையில் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு கஞ்சி வார்த்தலும், மதியம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு பசியாற்றுவித்தலும் நடைபெற்று வருகிறது. தயாள உள்ளம் கொண்ட தங்களின் பெருந் தயவினாலும், வள்ளல் பெருமானின் பெருங் கருணையினாலும் 10-ம் ஆண்டை நோக்கி மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த புண்ணியத் தொண்டில் தாங்களும், தங்கள் குடும்பத்தினரும், நண்பர்களும் பங்கு பெற்று கிடைப்பதற்கரிய உன்னதமான ஆன்மநேய அறப்பணிகளுக்கு அரிசி, பருப்பு, மற்றும் மளிகைப் பொருட்கள் போன்ற பொருட்களை அருளாக மாற்றியும், நிதியை மதியாக மாற்றியும் வாரி வழங்கி எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பெருங்கருணையில் தாங்களும் பாகம் பெற தங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
**நிர்வாகிகள்** மற்றும் **அறங்காவலர்கள்**
**தீபம் அறக்கட்டளை.**

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 8 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 16 தருமச்சாலைகள் மூலம்**

# அன்னம் பாலிப்பு




**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து**
**நீங்களும் அருளின்பம் பெற வாருங்கள்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 16 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ. 16, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,60,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும்:**

## 94440 73635 / 2244 2515

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to :

## Deepam Trust

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**
**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# ஓர் ஏழை மாணவனின் கல்விக்கு உதவிட வேண்டுமா?

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டையின் சார்பில் ஆண்டுதோறும் கல்வி உதவியாக இதுவரை 664 மாணவச் செல்வங்களுக்கு ரூ. 35,000,00/- க்கும் (35 லட்சம்) மேலாக கல்வி உதவித்தொகை வழங்கி உள்ளது.

## தொடர்ந்து 8 ஆண்டுகளாக...

இந்த ஆண்டும் படிப்பில் நன்றாக தேர்ச்சி பெற்ற கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்க திருவுள்ளம் கொண்டுள்ளோம், தயா உள்ளம் கொண்ட ஆன்மநேய உள்ளங்களே தாங்களும் பங்கு பெற்று கல்வி உதவியை வாரி வழங்கிட வேண்டுமாய் தங்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to :

**Deepam Trust**

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**

**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**



இங்ஙனம்

**நிர்வாகிகள்** மற்றும் **அறங்காவலர்கள்**

**தீபம் அறக்கட்டளை.**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிகளுக்கு மாதந்தோறும் வாரி வழங்கும் கொடை வள்ளல்களை தலைவணங்குகிறோம்

| S.No | Name | Place | Amount | S.No | Name | Place | Amount |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | M/S.Sri Mutharamman Traders | Velachery | Banana | 39 | Mr.Chandra | Velachery | 1000 |
| 2 | M/S.Martin Vegetables | Velachery | Vegetables | 40 | Mr.Gopal | Thiruvenchery | 1000 |
| 3 | M/S.Periyandavar Stores | Velachery | Vegetables | 41 | Mr.Gopalakrishnan | West Saidapet | 1000 |
| 4 | Mr.Pandian | IOC | 10000 | 42 | Mr.Jayaraman | Kodambakkam | 1000 |
| 5 | Prof.Ramanathan | IIT Madras | 7000 | 43 | Mr.Kannan | Velachery | 1000 |
| 6 | Mr.Arun Kumar | USA | 6001 | 44 | Mr.Nagamani | Medavakkam | 1000 |
| 7 | Mr.Palanisamy | Ramanathapuram | 5000 | 45 | Mr.Narasimhan | Korukkupet | 1000 |
| 8 | M/S.Poorvika Mobiles Pvt Ltd | Ekkattuthangal | 5000 | 46 | Mrs.Nirmala Chandrasekaran | Bangalore | 1000 |
| 9 | Mr.Ravi Kumar | New Delhi | 5000 | 47 | Mr.Parthasarathy | Korukkupet | 1000 |
| 10 | M/S.Thanganarayana Super Market | Velachery | 5000 | 48 | Mr.Radhakrishnan | Taramani | 1000 |
| 11 | Mr.Sivabalan | Medavakkam | 5000 | 49 | Mr.Subbaiah | Velachery | 1000 |
| 12 | Mr.Sreeram Chellappa | Besant Nagar | 5000 | 52 | Mr. Mohan | Kadambatur | 1000 |
| 13 | Mr.Anil Kumar Goel | Chennai | 3500 | 51 | Mrs.Tamilselvi Kandasamy | Royapuram | 1000 |
| 14 | Mr.Senthieel Kumar | Velachery | 3000 | 52 | Mr.Vedachalam | TAFE | 1000 |
| 15 | Prof.Muthukumaran | Sembakkam | 3000 | 53 | Mr.Ramani | Velachery | 500 |
| 16 | Mr.Gokul Kumar | IIT Madras | 3000 | 54 | Mr.Arumugam | Karur | 500 |
| 17 | Mrs.Mozhiarasi Ashokan | Saidapet | 3000 | 55 | Mr.Balakrishnan | Velachery | 500 |
| 18 | Mr.Ponnambalam | Anna Nagar | 3000 | 56 | Mr.Baranidharan | Athipattu | 500 |
| 19 | Mr.Purnachandra Rao | Pammal | 3000 | 57 | Mr.Chellappa | Velachery | 500 |
| 20 | Mr.Ravikkannan | USA | 3000 | 58 | Mr.Ganesan | Velachery | 500 |
| 21 | Mr.Pandurangan | Shenoy Nagar | 3000 | 59 | Mr.Hari Krishnan | Velachery | 500 |
| 22 | Mr.Arumugam | Velachery | 2000 | 60 | Mr.Hariharan | Velachery | 500 |
| 23 | Mr.Balaji | Adyar | 2000 | 61 | Mr.Jawin Kumar | Perumbakkam | 500 |
| 24 | Mr.Kandasamy | Anna Nagar West | 2000 | 62 | Mr.Kumaraguru | Ramapuram | 500 |
| 25 | Mr.Revanth Vignesh Balasundaram | Purasawalkam | 2000 | 63 | Mr.Parthasarathy | Tharamani | 500 |
| 26 | Prof.P S T Sai | IIT Madras | 2000 | 64 | Mr.Raj Kumar | Velachery | 500 |
| 27 | Mr.Selva Pillai | Ramapuram | 2000 | 65 | Mr.Raja | Karur | 500 |
| 28 | Dr.Ashokan | Guindy | 2000 | 66 | Mr.Shanmuganathan | Orchid Chemical | 500 |
| 29 | Mrs.Kumari Purusothaman | Velachery | 2000 | 67 | Mrs.Susi | Orchid Chemical | 500 |
| 30 | Mr.Sridhar | IIT Madras | 2000 | 68 | Mrs.Tamilselvi | Orchid Chemical | 500 |
| 31 | Mr.Govardhanan | West Mogappair | 1500 | 69 | Mr.Mohanadasse | Gowrivakkam | 405 |
| 32 | Mr.Chandrasekar | Neelankarai | 1500 | 70 | Mrs.Rajeswari | Maduravoyal | 250 |
| 33 | Mr.Panneer Selvam | Choolaimedu | 1500 | 71 | Mrs.Lakshmi | Velachery | 200 |
| 34 | Mr.Kamalakannan | Velachery | 1001 | 72 | Mr.Ashok Kumar | Pallikaranai | 150 |
| 35 | Mr.Kalidoss | Ashok Nagar | 1000 | 73 | Mr.Elumalai | SJC | 100 |
| 36 | Mrs.Lakshmi | Madurai | 1000 | 74 | Mr.Selvaraj | S Kolathur | 100 |
| 37 | Mr.Ahiladevi | Medavakkam | 1000 | 75 | Mr.Shanmugasundram | Trichy | 100 |
| 38 | Mr.Pradheep | Saidapet | 1000 | 76 | Mrs.Meena Moorthy | Thiruvanmiyur | 20 |

## தீபம் அறக்கட்டளையின் ஆன்மநேய அறப்பணிகள்

1. தினசரி காலை 16 தருமச்சாலைகள் மூலம் ஆயிரக்கணக்கான அன்பர்களுக்குக் கஞ்சி வார்த்தல் நடைபெற்று வருகிறது.
2. தினசரி மதியம் நித்ய தீப தருமச்சாலை மற்றும் நடமாடும் தருமச்சாலை மூலம் பல நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கு பசியாற்றுவித்தல் நடைபெற்று வருகிறது.
3. மாதந்தோறும் வறுமையால் வாடும் பார்வையற்ற குடும்பங்களுக்கு அரிசி, மற்றும் மளிகைப் பொருட்கள் ஆயுட்கால வாழ்வாதார உதவியாக கடந்த ஆறு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது.
4. மாதந்தோறும் நோயினால் வருந்தி, வறுமையால் வாடும் டயாலிஸிஸ் சிகிச்சைக்காக ஆயுட்கால உதவியாக பலருக்கு கடந்த ஐந்தாண்டுகளாக மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது.
5. ஆண்டுதோறும் வறுமையால் வாடும் கிராமப்புற மாணவர்களின் (நன்றாக தேர்ச்சி பெற்ற) எதிர்கால வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு மேற்படிப்புக்காக பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி உதவி வழங்கப்பட்டு வருகிறது.
6. மாதந்தோறும் வடலூர் சத்திய தர்மச்சாலையில் பூச நன்னாளில் 40 மாதங்களாக தீபத்தின் தன்னார்வத் தொண்டர்களும், சேவடிகளும் பங்கு பெற்று சமையல் மற்றும் பசியறாற்றுவிக்கும் சேவையும் செய்து வருகிறார்கள்.
7. மாதந்தோறும் பூச நன்னாளில் வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் இரவு 8.00 மணியளவில் ஆறு திரை நீக்கி ஜோதி தரிசனம் காட்டப்படுகிறது.
8. வாரந்தோறும் வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் எல்லா உயிர்களும் இன்புற்று வாழும் பொருட்டு அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் மற்றும் கூட்டு வழிபாடு நடைபெறுகிறது.
9. விரைவில் மேலும் 4 தருமச்சாலைகள் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் விரிவாக்கம் செய்ய எண்ணியுள்ளது.

**பஞ்சமில்லா பாரதம் படைப்போம்!**
**பசுமையான உலகத்தைக் காண்போம்!!**

### சென்னை வேளச்சேரி

# நித்ய தீப தருமச்சாலை

கடந்த 8 ஆண்டுகளாக தினசரி நூற்றுக்கணக்கானவர்களின் பசியைப் போக்கக் கூடிய நித்ய தீப அன்ன தருமச்சாலைக்கு வருகை தந்து, ஜோதி தரிசனம், மாத பூச நாளில் 6 திரை நீக்கி ஜோதி தரிசனம் செய்து, அருளின்பம் பெற தங்களையும், தங்கள் குடும்பத்தையும் அன்புடன் அழைக்கிறோம்!

**அடுத்த மாத பூச ஜோதி தரிசனம்**

**29.05.2017 (திங்கட்கிழமை) இரவு 8.00 மணிக்கு**

**26.06.2017 (திங்கட்கிழமை) இரவு 8.00 மணிக்கு**

**இடம் : நித்ய தீப தருமச்சாலை**

7/8, புத்தேரிக்கரைத் தெரு, தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை – 600 042

**நீரிடைச் சத்திகள் நிகழ்வகை பலபல**
**ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி (420)**

# நித்ய தீப தருமச்சாலை




சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலை மின்னொளியில் ஜொலிக்கும் காட்சி.




சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் முன்பு
சமைப்பதற்கு தயாராக உள்ள காய்கறி வகைகளின் கண்கொள்ளா காட்சி.

RNI : TNTAM/2010/35284 R.No.TN/CC(S)Dn/412/17-19
"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT
UNDER WPP NO.TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
Posted at Patrika Channel, Egmore, Chennai - 8. | Date of Publication : 20th of Every Month

கும்பகோணம் தருமச்சாலைகள் துவக்கவிழாவில் சென்னையிலிருந்து வருகை தந்த
ஆன்மநேய உள்ளங்களின் ஒரு பகுதியினர்.



To
Shri / Smt / Dr

Posted at Patrika Channel
Posted on 27-5-2017
Egmore, Chennai - 8

If undelivered Please Return to :

**DEEPAM TRUST**

(REDG. No. - 2035/07)

No. 30, Drowapathi Amman Koil Street (Next to Mosque), Velachery, Chennai - 600 042. Phone : 044 - 2244 2515
Cell : 94440 73635 | E-mail : admin@deepamtrust.in | Web : www.deepamtrust.in

Published by : M. Balakrishnan on behalf of Deepam Trust,
No.30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and
Printed by RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015.
Editor : M. Balakrishnan